OS.No. 54/2020

Date : 18.03.2026

Witness Name & Rank - சுப்பிரமணி - DW1

**சாட்சி அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது**

1. நான் இந்த வழக்கு சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்பு யாரிடம் கிரையம் பேசினேன் என்றால் விஜயக்குமாரிடம் பேசினேன். கிரையம் வாங்குவதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பு பேசினேன் என்றால் ஒரு வாரத்திற்கு முன்பு பேசினேன். 1ம் பிரதிவாதி விஜயக்குமார் மேற்படி வழகவு சொத்தின் உரிமையாளர் அல்ல என்று எனக்கு அப்போதே தெரியும் என்றால் அவரிடம் தான் பொது அதிகாரம் இருந்தது. யார் மூலம் 1ம் பிரதிவாதிக்கு பொது அதிகாரம் இருந்தது எனக்கு தெரிய வந்தது என்றால் அவர் தான் என்னிடம் கொடுத்து சொன்னார். 1ம் பிரதிவாதியே என்னிடம் வந்து தன்னிடம் பொது அதிகாரம் உள்ளதாகவும் நிலத்தை விற்க தயாராக உள்ளதாகவும் சொன்னாரா என்றால் ஆமாம். அவ்வாறு 1ம் பிரதிவாதி ஒரு வாரம் முன்பு நில வியாபாரம் தொடர்பாக பேசியதை காண்பிக்க ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு பேசிய போது ஒரு செண்ட் அல்லது ஒரு ஏக்கர் எவ்வளவு தொகை என்று குறிப்பிட்டு பேசப்பட்டதா என்றால் மொத்த நிலத்தையும் விலை பேசினோம்.
2. பொதுவாக ஒரு சொத்தை விலைக்கு வாங்குவதற்கு முன்பு வில்லங்கம் போட்டு பார்க்க வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு இந்த வழக்கு சொத்தை வாங்குவதற்கு முன்பு நான் வில்லங்கம் போட்டு பார்த்தேனா என்றால் பார்த்தேன். அவ்வாறு நான் வில்லங்கம் பார்த்த போது வழக்கு சொத்தில் என்ன வில்லங்கம் இருந்தது என்றால் வேறு ஒருவர் பெயரில் கிரைய ஒப்பந்தம் இருந்தது. எதற்காக கிரைய ஒப்பந்தம் போடப்பட்டிருந்தது என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி வில்லங்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்த கிரைய ஒப்பந்தத்தில் முழு கிரைய தொகையாக எவ்வளவு குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் சரியான நினைவில்லை சுமார் 10 லட்சம் போடப்பட்டிருந்ததாக நினைக்கிறேன். மேற்படி கிரைய ஒப்பந்ததின் முன் தொகை எவ்வளவு குறிப்பிடப்பட்டிருந்தது

என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி கிரைய ஒப்பந்தமான வா.சா.ஆ.5 ஆவணத்தில் முன் தொகையாக ரூ.2,50,000/– என குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் அது பற்றி தெரியாது. வா.சா.ஆ– 5 14.05.2009 ம் தேதி எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே நான் வில்லங்கம் பார்த்த போதே நான் கிரைய பெறுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே வழக்கு சொத்து மதிப்பு 10 லட்சம் இருந்ததுள்ளது என்றால் அவ்வாறு தான் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. வாதிகள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பற்றிய விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். வா.சா.ஆ 14 ல் உள்ள கையொப்பம் 1ம் பிரதிவாதியுடையது என்றால் சரிதான். வா.சா.ஆ 14 ல் என்ன என்ன ஆவணங்கள் எழுதப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் 14.05.2009 ல் இடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதி விஜயக்குமார் மற்றும் துரைசாமி ஆகியோர் சேர்ந்து திருப்பூரில் கதவு எண்.270 ஏ, தாராபுரம் ரோடு, புதுார் பிரிவில் கே.எஸ். பைனான்ஸ் என்ற பெயரில் நிதி நிறுவனம் நடத்தி வருகிறோம் என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் அவ்வாறுநிதி நிறுவனம் நடத்தி வந்தபோது 1ம் வாதி தனக்கு பாத்தியப்பட்ட சொத்தையும் இரண்டாம் வாதி தனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் பாத்தியப்பட்ட சொத்தையும் பத்திரத்தை வைத்து கடன் பெற்றார்கள் என்றால் சரியல்ல.

4. அப்போது 1ம் பிரதிவாதி வாதிகளிடம் தாவா சொத்துக்கள் தொடர்பாக பாதுகாப்பிற்கு பொது அதிகார பத்திரம் எழுத தர சொன்னதாகவும் உடன் இரண்டு 20 ரூபாய் முத்திரைத்தாள்கள், 3 பச்சை தாள்கள் மற்றும் பூர்த்தி செய்யப்படாத இரண்டு கடனுறுதிச் சீட்டுகள், பூர்த்தி செய்யப்படாத நான்கு பேங்க் ஆப் இந்தியா காசோலைகள் பெற்றுக்கொண்டார் என்றால் சரியல்ல. தனது வியாபார தேவைக்காக வேறு வழியில்லாமல் மேற்சொன்ன ஆவணங்களும் பொது அதிகாரமும் எழுதிக்கொடுத்து வாதிகள் 1ம் பிரதிவாதியிடம் கடன் பெற்றார்கள் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெறுவதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பு கிரைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டது என்றால் நான் கிரையம் பெறுவதற்கு ஒரு நாட்களுக்கு முன்பு ரத்து செய்யப்பட்டது. நான் பெற்ற கிரைய ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம்

செய்தது என்றால் பொன்னுசாமி மற்றும் விஜய் செய்தனர். மேற்படி எனது கிரைய ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த நபர் தான் 14.05.2009 தேதியிட்ட வா.சா.ஆ. 5 கிரைய ஒப்பந்தம் மற்றும் வா.சா.ஆ.3 பொது அதிகார பத்திரத்தில் கையொப்பம் செய்த நபர் என்றால் சரிதான்.

5. மேற்படி சாட்சியம் போட்ட நபரும் எங்களுடன் நிதி நிறுவனத்தில் உள்ள நபர் என்பதால் தான் பொது அதிகார பத்திரம், கிரைய ஒப்பந்தம் மற்றும் எனது கிரைய ஆவணம் என அனைத்து ஆவணத்திலும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி வாதிகளின் பத்து லட்சத்திற்கு மேல் மதிப்புள்ள சொத்தை தீய எண்ணத்துடன் அபகரிக்க வேண்டி குறைந்த விலை மதிப்பிட்டு எனக்கு கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நானும் 1ம் பிரதிவாதியும் ஒரே எண்ணத்துடன் இருந்ததுள்ளதால்தான் எங்களது இருவரது பதிலுரையிலும் 1ம் வாதியும் வங்கி காசோலையை பேங்க் ஆப் இந்தியா என்று குறிப்பிடாமல் தவறுதலாக ஒரே போல் இந்தியன் வங்கி என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. பொது அதிகார முகவர் என்ற அடிப்படையில் கிரையம் எழுதிய பிறகு 1ம் பிரதிவாதி வாதிகளுக்கு உரிய கணக்கை ஒப்படைத்துள்ளாரா என்றால் ஒப்படைத்தாக சொன்னார். அவ்வாறு எந்தவிமான உரிய கணக்கையும் 1ம் பிரதிவாதி ஒப்படைக்கவில்லை அவ்வாறு இருந்தால் தனது பதிலுரையில் தாக்கல் செய்திருப்பார் என்றால் சரியல்ல. கிரையம் செய்த நிலையில் நான் சுவாதீனத்தில் இல்லை, இன்றைய தினம் வரை வாதிகளின் தனிப்பட்ட சுவாதீனத்தில் உள்ளது எனவே நாங்கள் எழுதிய ஆவணங்கள் வெறும் பெயரில் அளவில் பதிவு துறை ஆவணங்கள் அவை நடைமுறைக்கு வரவில்லை என்றால் சரியல்ல, நான் கிரையம் பெற்று பட்டா வாங்கி சுவாதீனத்தில் உள்ளேன்.

6. மேற்படி வாதிகள் தாங்கள் பெற்ற கடன் ரூ. 5 லட்சத்தை வாதிகள் 17.03.2011ம் தேதி பைசல் செய்துவிட்டார்கள் 1ம் பிரதிவாதி பிறகு உடன்படிக்கையை ரத்து செய்து ஆவணங்களை தருவதாக சொன்ன நிலையில் உடன்படிக்கையை ரத்து செய்துவிட்டு பொது அதிகாரத்தை ரத்து செய்யாமலும் ஆவணங்களையும் திருப்பி தராமலும் தீய எண்ணத்துடன் எனக்கு கிரையம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிகள் தங்களது தொழில் நிமித்தமாக அதிக வேலை பளு இருந்ததால் தொடர்ந்து 1ம் பிரதிவாதியை

கண்காணிக்க இயலவில்லை என்றால் சரியல்ல. அதன் பிறகு தான் 19.04.2018 ம் தேதி பொது அதிகாரத்தை ரத்து செய்வதாக முறையாக கடிதத்தின் மூலம் ரத்து செய்துவிட்டார் என்றால் சரியல்ல. அதன் பிறகு வில்லங்கம் போட்டு பார்த்த போது தான் நான் பெற்ற கிரையம் தெரியவந்து 2020 ல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனவே நான் பெற்ற கிரையம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல அது ரத்து செய்யப்பட வேண்டும் எனவே வாதி கோரியுள்ள படி செலவுத்தொகையுடன் வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.